2015 ஆகஸ்ட் 25]

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில் மேற்கு கோபுரம் வழியாக மாற்று வழி மலைப்பாதை அமைப்பதற்கு வனத் துறை நிலங்கள் மற்றும் தனியார் நிலங்கள் தேவைப்படுகின்றன. தனியார் நிலங்களைக் கையகப்படுத்த திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வனத் துறை நிலத்தைப் பெறவேண்டுமெனில் நில மாறுதல் அடிப்படையில் அதற்கு ஈடாக இரண்டு மடங்கு நிலத்தை வனத் துறைக்கு வழங்க வேண்டுமென்பது விதியாகும். இந்நேர்வில் திருச்செந்தூர் வட்டம், தேரி குடியிருப்பு, கற்குவேல் அய்யனார் கோயிலுக்குச் சொந்தமான குதிரைமொழி கிராமம், புல எண் 141-ல் 5.92 ஹெக்டேர் நிலத்தினை வனத் துறைக்கு விற்பனை செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி நிலம் தொடர்பான வழக்கு ஒன்று மதுரை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், இவ்வழக்கு முடிந்தவுடன் நிலம் கையகப்படுத்தும் பணியினைத் துரிதப்படுத்தி, திருத்தணி திருக்கோயிலுக்கு மாற்றுவழி மலைப்பாதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) அமைக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

சிமெண்ட் ஆலை

***56155 திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியில் சிமெண்ட் ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆலங்குளம் மற்றும் அரியலூர் ஆலைகளை விரிவாக்கம் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ள காரணத்தினால் சோழவந்தான் தொகுதியில் புதிய சிமெண்ட் ஆலை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுத்த மரத்தில்தான் கல்லடி விழும் என்பதைப்போல, தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல பகல், இரவு பாராது தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக அரும்பாடுபட்டுக்கொண்டிருக்கும் கழகத்தின் காவல் தெய்வம், சோதனைகளைக் கடந்து சாதனைகளைப் படைத்துவரும் எங்கள் குலவிளக்கு, எதிரிகளை உதிரிகளாக்கி, தடைக்கல்லை படிக்கல்லாக்கி உயர்ந்து கோபுரமாய் எழுந்து நிற்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

உலகம் சமநிலை பெற வேண்டும்,
உயர்வு தாழ்வில்லா நிலை வேண்டும்,
நிறைவே காணும் மனம் வேண்டும்,
இறைவா அதை நீ தர வேண்டும்,

என்ற அகத்திய மாமுனிவரின் பாடல் வரிகளுக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அனைத்துத் துறைகளும் சரித்திர சாதனைகள் படைத்து வரும் இந்தவேளையில் முல்லைப் பெரியாறு அணையை, வாழும் பென்னிகுவிக் ஆக மீட்டுத் தந்து, நதிநீர் பாய்ந்து உழவுத் தொழில் செழித்திடும் வகையில் சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பகுதியில் உழவுத் தொழிலை நம்பி வாழும் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்ந்திட செய்து, தொழில் வளத்தை உருவாக்கும் விதத்தில் சூரிய

விளக்குடன்கூடிய பசுமை வீடுகள் தந்து, ஏழைகளின் குடிசைகளையெல்லாம் கான்கிரீட் வீடுகளாக மாற்றி, அவர்களின் உள்ளத்திலும் இல்லத்திலும் நிலையான இடம் பிடித்த மாண்புமிகு அம்மா அவர்கள், சிமெண்ட் தொழிற்சாலை அமைத்து சோழவந்தான் தொகுதியில் வாழும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி அவர்களின் வாழ்வாதாரம் உயர வழிவகை செய்ய வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, அங்கு அம்மா சிமெண்ட் தொழிற்சாலை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிமெண்ட் ஆலை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், 10 இலட்சம் டன் அளவிற்கு கொள்ளளவு கொண்டதாக ஆலை உருவாக்கப்பட வேண்டும். அதற்கு கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு வேண்டும். சுண்ணாம்புக்கல்லைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட 2 ஆயிரம் ஏக்கரில் 25 ஆண்டுகளுக்குத் தேவைப்படும் சுண்ணாம்புக்கல் இருந்தால்தான் புதிய ஆலை அமைக்க முடியும். சோழவந்தான் தொகுதியில் அந்த அளவிற்கு சுண்ணாம்புக்கல் இல்லாத காரணத்தினால் புதிய ஆலை அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்றுதான் சொன்னேன். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த இடத்திலே சிமெண்ட் ஆலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அலுவலர்களை அழைத்து, சுண்ணாம்புக்கல் எந்த அளவிற்கு இருக்கிறது என்று ஆய்வு செய்து, அதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் சுமார் 30 ஆண்டுகாலமாக N.M.R. பணியாளர்கள் தினக்கூலிகளாகப் போராடி வந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கருணையால் 114 குடும்பங்களுடைய 30 ஆண்டுகால போராட்டத்திற்கு விடிவு வந்தது. அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

129—

மேம்பாலம்

***47628 திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையிலுள்ள நான்கு மாசி வீதிகளிலும் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சூதுமதியாளர்களை, சூழ்ச்சிகளை வேரறுத்து, தடைகளைத் துணிவோடு சந்தித்து, நீதியை நிலைநாட்டி, ஐந்தாவது முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களை என்றும் காக்கும்